DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SPL.SC.No.1/2024**

PROSECUTION WITNESS No. 5

| | |
|---|---|
| Name | : K.S. Kandha Kumar |
| Father's Name | : Subbanna. |
| Age | : 57 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 10th day of September, 2025.

---

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை :-**

நான் தற்போது, ஆவடி காவல் ஆணையரகத்தில் எஸ்டேட் வெல்பேர் பிரிவில் உதவி ஆணையாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். முதலாவது எதிரியின் பெயர் ராமலிங்கம், அவர் K7, ICF காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்தார். மற்ற இருவரும் அதே காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு காவலர்களாக பணிபுரிந்தார்கள். நான் 2011 ஜூலை மாதம் முதல் 2013 மார்ச் மாதம் வரை K7, ICF காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்தேன். 11.01.2012 அன்று இரவு சுமார் 8.45 மணியளவில் நிலைய காவல் உதவி ஆய்வாளர் ஜானி செல்லப்பா,

என்னை செல்போனில் தொடர்பு கொண்டு தான் மதியம் Shift அதாவது மதியம் ஒரு மணி முதல் இரவு 9 மணி வரை ரோந்து வாகன காவல் பணியில் இருப்பதாகவும் Constable Road, அருகேயுள்ள ICF School பக்கமாக செல்லும்போது அங்கு ஒரு இருட்டான பகுதியில் 2 ஆண், ஒரு பெண் இருப்பதை பார்த்து விசாரிப்பதற்காக அருகில் சென்றதாகவும், அதில் ஒரு ஆண் தனது பெயர் தினேஷ் என்று கூறியதாகவும் அவர் தனது மாமன் மகள் காஞ்சனா என்பவரை பணியிலிருந்து வீட்டிற்கு அழைத்து செல்லும் வழியில் அங்கு நின்று பேசிக் கொண்டிருந்ததாகவும் அப்போது அங்கு வந்த மற்றுமொரு ஆண் நபர், தினேஷிடம் இங்கே ஏன் நிற்கிறீர்கள், லவ் பண்ணுகிறீர்களா என்று கையிலிருந்த செல்போனை பிடுங்கியதாகவும் காவல் நிலையத்தில் வந்து செல்போனை வாங்கிக் கொள்ளும்படி கூறியதாகவும் போலீசாரை பார்த்ததும் தினேஷிடம் மீண்டும் போனை கொடுத்ததாகவும் உதவி ஆய்வாளர் அந்த நபரை விசாரிக்க அந்த நபர் தனது பெயர் நித்யராஜ் என்றும் தான் K2, அயனாவரம் காவல் நிலையத்தில் Friends of Police ஆக பணிபுரிவதாக கூறியதாகவும், இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் K2, அயனாவரம் ஆய்வாளர் கனகராஜிடம் விசாரித்ததாகவும் அவர் மேற்படி நித்யராஜ் அந்த காவல் நிலையத்தில் Friends of Police ஆக பணிபுரிந்ததை உறுதி செய்ததாகவும், கடந்த ஒரு மாதமாக அவர் பணிக்கு வரவில்லை என்று கூறியதாகவும், ஆய்வாளர் கூறியதன் அடிப்படையில் நித்யராஜ் விசாரணைக்கு ஒத்துழைக்க ஒப்புக் கொண்டதாகவும் எனவே நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்து வந்திருப்பதாகவும் கூறினார்.

அது போன் பறிப்பு சம்பவமாக இருப்பதால் குற்றப்பிரிவு ஆய்வாளரிடம் ஒப்படைக்கும் படி நான் அறிவுறுத்தினேன். சுற்று அலுவல் முடித்து இரவு 10 மணிக்கு நிலையம் வந்தபோது நிலைய பாரா சேரன் நித்யராஜை அழைத்து வந்து குற்றப்பிரிவில் விசாரித்து கொண்டிருப்பதாக கூறினார். நான் இரவு 10.15 மணிக்கு ஓய்விற்கு சென்றுவிட்டு மறுநாள் காலை 7 மணிக்கு நிலையம் வந்து அன்றாட பணிகளை பார்க்க லாக்கப்பை செக் செய்தபோது அங்கு யாரும் இல்லை. அதன்பின்பு, 14.01.2012 அன்று நித்யராஜை சிறையில் அடைத்ததாகவும் 16.01.2012 அன்று அவர் சிறையிலிருந்து உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்போது இறந்து விட்டதாகவும் அதனால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டு பின்னர், 18.01.2012 அன்று இறந்த உடலை உறவினர்கள் பெற்றுக் கொண்டதாகவும் தெரியவந்தது. உதவி ஆய்வாளர் திரு. ஜானி செல்லப்பா ரோந்து வாகனத்தில் சுற்றுக் காவல் செய்தபோது, அவருடன் ஓட்டுநராக நடராஜும், Friends of Police ஆக சுனில் குமார் என்பவரும் இருந்தார்கள். மேற்படி நிகழ்வுகளை குற்றப்பிரிவு தனியாக பொதுநாட்குறிப்பு பராமரிப்பதால் நான் சட்டம் ஒழுங்கு பிரிவில் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யவில்லை. இது சம்பந்தமாக என்னை CBCID காவல் ஆய்வாளர் முதலில் விசாரித்தார். பின்னர், 04.11.2022 அன்று காவல் துணை கண்காணிப்பாளர் CBCID அவர்கள் விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

எங்கள் நிலையத்தில் ரோந்து வாகனத்திற்க்கு என்று தனிப்பட்ட பொதுநாட்குறிப்பு உள்ளது என்றால் சரிதான். 11.01.2012 அன்று சுற்றுக் காவல் பதிவேட்டில் உதவி ஆய்வாளர் ஜானி செல்லப்பா, நித்யராஜை விசாரணைக்காக அழைத்து வந்தது குறித்து குறிப்பில் உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படுவது எங்கள் காவல் நிலைய பேட்ரோல் Vehicle பொதுநாட்குறிப்பின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது **எ.சா.ஆ. 8**. மேலும், பாரா பதிவேட்டில் 11.01.2012 அன்று நித்யராஜை பாராவிடம் ஒப்படைத்ததாக பதிவுகள் இல்லை என்றால் சரிதான். எ.சா.ஆ.4 ல், 13.01.2012 அன்று சுற்றுக் காவல் விடுவிப்பு பதிவேட்டில் 23.30 மணிக்கு நித்யராஜை K7, ICF காவல் நிலைய குற்ற எண். 24/2012 ன் கீழ் எதிரியை நித்யா என்ற நித்யராஜை பாரா வசம் ஒப்படைத்ததாக குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான், அந்த குறிப்பை செய்தவர் PC 3650. அந்த காவலர் சட்டம் ஒழுங்கு பிரிவை சேர்ந்தவர்தான். 14.01.2012 தேதியன்று சுற்றுக்காவல் விடுவிப்பு பதிவேட்டில் காலை 7 மணிக்கு ICF காவல் நிலைய குற்ற எண். 24/2012 வழக்கு சம்பந்தப்பட்ட எதிரி நித்யராஜை சம்பவ இடத்தை காண்பிப்பதற்கும், சொத்தை மீட்பதற்கும் பாரா வசமிடமிருந்து பெற்றுக் கொண்டதாகவும் மீண்டும் 11.30 மணியளயில் பாரா வசம் ஒப்படைத்ததாகவும் உள்ளது என்றால் சரிதான். அப்போது பாரா பணியிருந்தவர் 19759 காவலர், அவரும் சட்டம் ஒழுங்கு பிரிவை சேர்ந்தவர்தான். அதே நாள் 16.00 மணியளவில் மேற்படி குற்ற எண் சம்பந்தப்பட்ட எதிரி நித்யராஜை நீதிமன்ற காவலுக்காக பாரா

வசமிடமிருந்து பெற்றுக் கொண்டதாக குறிப்புள்ளது என்றால் சரிதான், அதில் மூவர் கையொப்பமிட்டுள்ளார்கள் என்றால் மூன்று பேரின் சுருக்கொப்பம் உள்ளது. உதவி ஆய்வாளர் ஜானி செல்லப்பா நித்யராஜை 11.01.2012 அன்று விசாரணைக்காக அழைத்து வரவில்லை என்றாலும் என்னிடம் அது குறித்து தொலைபேசியில் கூறவில்லை என்றாலும் குற்றப்பிரிவு ஆய்வாளரிடம் ஒப்படைக்குமாறு நான் கூறவில்லை என்றாலும் அவர் அவ்வாறு ஒப்படைக்கவில்லை என்றாலும் சரியல்ல. கே7, ICF காவல் நிலையத்தில் லாக்கப் கிடையாது என்றால் சரியல்ல. கே7, ICF காவல் நிலையம் சம்பவ சமயத்தில் ஒரு தனியார் கட்டடிடத்தில் இயங்கி வந்தது என்றால் சரியல்ல, அது மத்திய அரசிற்கு சொந்தமான கட்டிடமாகும். 2015 வெள்ளத்தில் கே7, ICF காவல் நிலையம் மூழ்கியது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது, அப்போது நான் அங்கு பணியில் இல்லை, அம்பத்தூர் காவல் நிலையத்தில் பணியிலிருந்தேன். நான் CBCID சொல்லிக் கொடுத்து நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் ஜானி செல்லப்பாவும் பேசிய தொலைபேசி எண்களை நான் CBCID போலீசாரிடம் கூறினேனா என்றால் கூறினேன்.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SPL.SC.No.1/2024**

PROSECUTION WITNESS No. 4

Name : E.Kanagaraj

Father's Name : Isakkimuthu

Age : 57

Address :

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 10th day of September, 2025.

---

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது, ஆவடி காவல் ஆணையகரத்தில் உள்ள ஆவடி சரகத்தில் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2011 ஜூலை முதல் 2014 ஜூலை வரை அயனாவரம் காவல் நிலையத்தில் சட்டம், ஒழுங்கு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 11.01.2012 அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் நான் எனது சரகத்தில் ரோந்து பணியிலிருந்தேன். அப்போது, கே7, ICF காவல் நிலைய சட்டம், ஒழுங்கு உதவி ஆய்வாளர் திரு. ஜானி செல்லப்பா அவர்கள் என்னை தொலைபேசியில் அழைத்து தான், Costable Road, அம்பேத்கர் சிலை சந்திப்பு அருகிலுள்ள ரயில்வே ஸ்கூல் ஒட்டி செல்கின்ற சாலையில்

ரோந்து பணியிலிருந்த போது 3 பேர்கள், அவர்கள் அருகில் 2 பைக்கும் இருந்ததாகவும், அருகில் சென்று விசாரித்த போது, ஒருவர் பெயர் தினேஷ் என்றும், அருகிலிருந்த பெண்ணின் பெயர் காஞ்சனா என்றும், அந்த பெண் தினேஷின் மாமா மகள் என்றும், காஞ்சனா வேலை முடித்து வரும் போது அவரை வீட்டிற்கு அழைத்து சென்றதாகவும், இருவரும் பேசிக் கொண்டிருந்த போது, அருகில் நின்று கொண்டிருந்தவர் பைக்கில் வந்து அவர் வைத்திருந்த செல்போனை பிடுங்கிக் கொண்டதாகவும் யார் நீங்கள், எதற்காக இருட்டில் நின்று கொண்டு லவ் பண்ணுறீங்களா என்று கேட்டதாகவும் அதற்கு தினேஷ் நீங்கள் யார் என்று அந்த நபரை கேட்டதற்கு அவர் தான் அந்த ஏரியா போலீஸ் என்று கூறியதாகவும் காவல் நிலையத்திற்கு வந்து செல்போனை பெற்றுச் செல்லுங்கள் என்றும் கூறிக் கொண்டிருந்தபோது, போலீசாரைக் கண்டதும் செல்போனை தினேஷிடம் கொடுத்துவிட்டதாகவும் தெரிவித்தாகவும் அருகிலிருந்த காக்கி பேண்ட் போட்டிருந்த நபரை உதவி ஆய்வாளர் விசாரணை செய்த போது, அவருடைய பெயர் நித்யராஜ் என்றும் அவர் அயனாவரம் காவல் நிலையத்தில் Friends of Police ஆக பணிபுரிவதாக கூறியதாகவும் அவர் வந்த Bajaj Discovery வாகனத்தில் லத்தி ஒன்று இருந்ததாகவும் உதவி ஆய்வாளர் நித்யராஜிடம், இது போல் பல சம்பவங்கள் அந்த ஏரியாவில் நடைபெற்றுள்ளதாகவும் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்ததாகவும் அதற்கு நித்யராஜ் வர முடியாது என்றும் அவரைப்பற்றி என்னிடம் விசாரிக்கும்படி கூறியதாகவும் அதன் அடிப்படையில்

உதவி ஆய்வாளர் போன் செய்ததாகவும் கூறினார், மேலும் அவர் என்னிடம் நித்யராஜ் பற்றி விசாரித்தார். நான் கடந்த 2010 முதல் நித்யராஜ் எங்கள் காவல் நிலையத்தில் Friends of Police ஆக பணிபுரிந்து வந்ததாகவும் கடந்த ஒரு மாதமாக பணிக்கு வரவில்லை என்றும் கூறினேன். உதவி ஆய்வாளர் என்னிடம் நித்யராஜை விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி கூறுமாறு கூறினார், நான் போனை அவரிடம் கொடுக்கும்படி கூறினேன். நித்யராஜிடம் விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி கூறினேன், அவர் என்னிடம் விசாரணைக்கு ஒத்துழைப்பதாக கூறினார். உதவி ஆய்வாளருடன் செல்வதாக கூறினார். அதன்பிறகு கடந்த 14.01.2012 அன்று நித்யராஜை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியதாகவும் அதன்பின் 16.01.2012 அன்று சிறையிலிருந்து மருத்துவமனை செல்லும் வழியில் நித்யராஜ் இறந்துவிட்டதாகவும் கேள்விப்பட்டேன். 08.08.2022 என்று CBCID ஆய்வாளர் விசாரித்தார். பின்பு 04.11.2022 அன்று துணை காவல் கண்காணிப்பாளர் விசாரித்தார்.

## <u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

எங்கள் அயனாவரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலர் வரை ஒரு பொதுநாட்குறிப்பும், உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளருக்கு தனி பொதுநாட்குறிப்பும் பராமரித்தோம். கே7, ICF காவல் நிலையத்திற்கும், எங்கள் காவல் நிலையத்திற்கும் ஒரே காவல் துறை நிலையாணைகள்தான் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பொதுநாட்குறிப்பில் உதவி ஆய்வாளரும் குறிப்புகள் செய்துள்ளார் என்றால் சரியல்ல, உதவி ஆய்வாளர் உத்தரவுப்படி

சென்றதாக குறிப்புகள் உள்ளது. என்னிடம் காட்டப்படும் கே2, அயனாவரம் காவல் நிலைய பொதுநாட்குறிப்பில் எனது பணிகள் பற்றிய விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ரோந்து பணிக்கு செல்லும் போது பொதுநாட்குறிப்பில் குறிப்பிடும் வழக்கம் உள்ளது என்றால் அலுவலருக்கான பொதுநாட்குறிப்பில் குறிப்பிடுவோம். எனக்கு உதவி ஆய்வாளர் ஜானி செல்லப்பா தொலைபேசியில் அழைத்ததையும், அவர் கூறிய விவரங்களையும் நான் எனது பொதுநாட்குறிப்பில் குறிப்பிட்டேனா என்றால் இல்லை, ஏனென்றால் அது எங்கள் காவல் நிலையம் சம்பந்தபட்ட வழக்கல்ல. நான் முதல் விசாரணையில் கூறிய விவரங்கள் எங்கள் காவல் நிலைத்திற்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் அல்ல. எனக்கும், ஜானி செல்லப்பாவிற்மிடையே நடந்த தொலைபேசி உரையாடல் சம்பந்தமாக நான் என் தொலைபேசி எண்ணை CBCID போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். CBCID போலீசார் எங்கள் காவல் நிலைய ரோந்து பொதுநாட்குறிப்பு, நிலைய பொதுநாட்குறிப்பு ஆகியவற்றை கேட்டு பெற்றார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் பொதுநாட்குறிப்பு, பேட்ரோல் Vehicle ன் பொதுநாட்குறிப்பு, Duty Roster, Rough Duty Roaster ஆகியவை பராமரிக்கப்படும் என்றால் சரிதான். பொதுநாட்குறிப்பு காவலர் முதல் நிலைய பொறுப்பு அதிகாரிவரை அனைவருக்கும் பொதுவானது என்றாலும், நான் அலுவலர்களுக்காக தனியாக பொதுநாட்குறிப்பு பராமரித்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் CBCID சொல்லிக் கொடுத்து அதை அப்படியே நீதிமன்றத்தில்

ஒப்பிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் ஜானி செல்லப்பாவிற்மிடையே எந்த தொலைபேசி உரையாடலும் நடைபெறவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக அவ்வாறு கூறுகிறேன் என்றாலும்ட சரியல்ல. Friends of police க்கென்று தனியாக Duty Roaster கிடையாது, வந்தால் வருகையை குறிப்போம். Friends of Police என்பவர்கள் சந்தேக நபர்களை அடிப்பதற்காக பயன்படுத்தப்படுபவர்கள் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SPL.SC.No.1/2024**

PROSECUTION WITNESS No. 6

| | |
|---|---|
| Name | : வெண்ணிலா |
| Husband's Name | : Sriram |
| Age | : 46 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 10th day of September, 2025.

---

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது W4, அனைத்து மகளிர் காவல் நிலையம், கீழப்பாக்கம் சென்னை –10 என்ற முகவரியில் பெண் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகைளத் தெரியும். முதலாவது எதிரியின் பெயர் ராமலிங்கம், அவர் K7, ICF காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்தார். மற்ற இருவரும் அதே காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு காவலர்களாக பணிபுரிந்தார்கள். 2011 முதல் 2015 வரை K7, ICF காவல் நிலையத்தில் பெண் காவலராக பணிபுரிந்தேன். K7, ICF காவல் நிலைய சட்டம் ஒழுங்கு பிரிவில் 11.01.2012 அன்று காலை 7 மணி முதல் 13.00 மணி வரை மற்றும் மாலை 17.00 மணி முதல் 21.00 மணி வரை நிலைய Receiption அலுவலில் இருந்தேன். அன்று மதியம் 13.00 மணி முதல் 21.00 மணி வரை தலைமைக் காவலர்

14650 திரு.காரியப்பன் அவர்கள் நிலைய பாரா அலுவலில் இருந்தார், 20.45 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு. ஜானி செல்லப்பா அவர்கள் பேட்ரோல் வாகன ஓட்டுநர் நடராஜன் அவர்களும் பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த நித்யராஜ் என்பவரை அழைத்து வந்தார்கள். 21.00 மணியளவில் எனக்கு பணி முடிந்ததால் நான் அவர்களை சரிவர கவனிக்கவில்லை, உதவி ஆய்வாளர் ஜானி செல்லப்பா மற்றும் பேட்ரோல் வாகன ஓட்டுநர் இருவரும் அவரை Receiption க்கு பின்புறம் உள்ள மெயின் அறைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர், அடிக்காதீங்க என்று அழறல் சத்தம் கேட்டது. சட்டம் ஒழுங்கு எழுத்தர் திரு. தாமோதரன் அவர்கள் அவரது இருக்கையிலிருந்தார். குற்றப்பிரிவு ஆய்வாளர் திரு. ராமலிங்கம் அவர்களும், குற்றப்பிரிவு காவலர் ஆனந்த் வினோத் சிங், காவலர் விஜயகுமார், மெயின் அறையில் இருந்தார்கள். அப்போதுதான் வலிக்குது, அடிக்காதீங்க என்ற சத்தம் கேட்டது. அவ்வாறு சத்தமிட்டது நித்யராஜ். 21.00 மணியளவில் எனக்கு பணி முடிந்ததால் இரவு அலுவலுக்கு பாரா காவலர் சேரன் அவர்களிடம் பேட்ரோல் வாகனத்திலிருந்த அழைத்து வரப்பட்ட நித்யராஜை குற்றப்பிரிவு ஆய்வாளர் விசாரித்து கொண்டிருப்பதாக சொல்லிவிட்டு நான் சென்றுவிட்டேன். 12.01.2012 அன்று காவல் நிலைய Receiption பணிக்கு வந்தேன், அப்போது பாரா காவலில் தலைமைக் காவலர் காரியப்பன் இருந்தார், நித்யராஜ் அவர்கள் குற்றப்பிரிவு ஆய்வாளர் அறையில் இருப்பதாக கூறினார். அறை கதவு மூடியிருந்தது, நான் நித்யராஜை பார்க்கவில்லை. சுமார் 11.00 மணியளவில் நித்யராஜின் அம்மா அவர்கள், தனது மகனை பார்க்க வேண்டும் என்று என்னிடம் கேட்டார், நான் குற்றப்பிரிவு எழுத்தரிடம் கேட்டேன், அவர் யாரையும் விடாதம்மா என்று கூறினார். நான் நித்யராஜின் அம்மாவிடம் நீங்க ஓரமா இருங்க, தேவைப்பட்டால் கூப்பிடுவார்கள் என்று கூறினேன். இரண்டு நாட்கள் கழித்து நித்யராஜை ரிமாண்ட்

செய்ததாக கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக 26.10.2022 அன்று CBCID துணை ஆணையர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

CBCID போலீசார் விசாரணையில் நான் எனக்கு 21.00 மணிக்கு அலுவல் முடியும் நேரம் என்பதாலும், எனது கணவர் என்னை வீட்டிற்கு அழைத்து செல்ல வந்து விட்டதாலும், நான் எதையும் பார்க்கவில்லை என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். CBCID போலீசார் விசாரணையில் நான் குற்றப்பிரிவு ஆய்வாளர் திரு. ராமலிங்கம் அவரது அறைக்கு வெளியே நின்று கொண்டிருந்தார் என்றும், உடன் குற்றப்பிரிவு காவலர்கள் ஆனந்த வினோத்சிங் மற்றும் விஜயகுமார் ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். CBCID போலீசார் விசாரணையில், "நான் நித்யராஜின் அம்மாவிடம் நீங்க ஓரமா இருங்க, தேவைப்பட்டால் கூப்பிடுவார்கள் என்று கூறினேன் என்று கூறினேனா" என்றால் இல்லை. CBCID போலீசார் விசாரணையில், "இரண்டு நாட்கள் கழித்து நித்யராஜை ரிமாண்ட் செய்ததாக கேள்விப்பட்டேன்" என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 2015 வெள்ளத்தின் போது நான் K7, ICF காவல் நிலையத்தில் பணியில் இருந்தேனா என்றால் அப்போது நான் W4, அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு பணிமாற்றத்தில் சென்றுவிட்டேன். 11.01.2012 அன்று உதவி ஆய்வாளர் ஜானி செல்லப்பா மற்றும் ஓட்டுநர் நடராஜன் ஆகியோர் நித்யராஜை காவல் நிலையத்திற்கு அழைத்து வரவில்லை என்றால் சரியல்ல. 12.01.2012 அன்று இரவு 11.30 மணியளவில் தினேஷ் என்பவர் காவல் நிலையத்தில் நித்யராஜ் மீது புகார் அளித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, மறுநாள் தெரிந்து கொண்டேன். 13.01.2012 அன்றிரவு நித்யராஜை, தினேஷ் மற்றும் சிலர் காவல் நிலையத்திற்கு இரவு 11.30 மணியளவில் அழைத்து வந்தார்கள்

என்றால் இது பற்றி எனக்கு தெரியாது, மறுநாள் அது குறித்து கேள்விப்பட்டேன். முதல் விசாரணையில் அடிக்காதீங்க, வலிக்குது என்று நித்யராஜ் சொன்னதை கேள்விபட்டதை போலீசார் சொல்லிக் கொடுத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. CBCID போலீசார் சொல்லிக் கொடுத்து முதல் விசாரணையில் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |